டில் மேலும் 200 டிநோட்டிபைடு கள்ளர் சமுதாயத்தை சேர்ந்த மாணவியர்களைச் சேர்த்து, அவர்கள் தங்குவதற்கு உடனடியாக வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள் றேன்.

கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் சொல்கிறேன். இந்தப் பள்ளிகளை எல்லாம் எடுத்துப் பார்க்கும்போது தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். பிராமணர் சமுதாயம் முன்னேறுவதற்குக் காரணம் என்னவென்றால், பிராமணர்கள் படித்தவர்கள், பிள்ளைகள் வீட்டுக்கு போனவுடன் அந்த குழந்தைகளை படி, படி என்று தாய்மார்கள் சொல்வார்கள்.

(பிற்பகல் 1-20)

அதேபோல் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், அந்த ஹாஸ்டலில் படிக்கிறார்கள். நலிவுற்ற நிலைமையில் உள்ள பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த பெண்கள் மிகத் தரமான, நல்ல முறையிலே, மிகக் கெட்டிக்காரர்களாக விளங்குகிறார்கள், கல்வியில், அந்த ஹாஸ்டலில் உள்ள வசதிகளைப் பார்த்தால், அதிகமாக கிட்டத்தட்ட 75 சதவீதம் பிற்பட்ட மாணவர்களுக்கு இருக்கிறதே தவிர, பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவிகளுக்கு இல்லை என்று தெரிகிறது. தந்தை பெரியார் அவர்களின் வாரிசாகத் திகழ்கின்ற நீங்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவியர்களுக்கு அதிகமான, தரமான கல்வியை அளித்தால் தான், நிச்சயமாக சமுதாயத்திலே ஒரு புரட்சிக்கு வகை செய்தவர்களாக ஆவீர்கள் என்று சொல்லிக்கொண்டு, வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

8. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இன்று (28—3—1984) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்கப் பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

29—3—1984 (வியாழன்) முதல் 31—3—1984 (சனி) முடிய.	ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி-மாற்றம் ஏதும் இல்லை.

பேரவைத் துணைத் தலைவர்

(பேரவைக் கூட்டம் 31—3—1984 அன்று ஒத்திவைக்கப் பட்டு மீண்டும் பேரவை 9-4-1984 அன்று காலை 10.00 மணிக்குக் கூட்டப்படும். அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை. 9—4—1984 முதல் மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் எடுத்துக்கொள்ளப்பெறும்.)

9—4—1984 (திங்கள்) ..	எண். 5 — முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் எண். 6—பத்திரப் பதிவு. எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.
10—4—1984 (செவ்வாய்) ..	எண். 12—தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.
11—4—1984 (புதன்) ..	எண். 35—நுகர் பொருள் வழங்கல்.
12—4—1984 (வியாழன்) ..	எண். 21—மீனளம். எண். 27—கதர்த் தொழில்.
13—4—1984 (வெள்ளிக்கிழமை)	தமிழ் வருடப் பிறப்பு—விடுமுறை.
14—4—1984 (சனிக்கிழமை)	மகாவீர் ஜயந்தி—விடுமுறை.
15—4—1984 (ஞாயிற்றுக் கிழமை).	விடுமுறை.
16—4—1984 (திங்கட்கிழமை)	எண். 25—சின்கோனா. எண். 45—காட்டுவளத் துறை. எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். எண். 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.
17—4—1984 (செவ்வாய்) ..	எண். 18—மருத்துவம். எண்.19—பொது சுகாதாரம். பேரவை மாலையிலும் கூடும்.

(பேரவைத் துணைத் தலைவர்).

18—4—1984 (புதன்)	..	எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். எண். 39—சாலைகளும், பாலங்களும். எண். 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
19—4—1984 (வியாழன்)	..	எண். 23—கூட்டுறவு. எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்.
20—4—1984 (வெள்ளி)	..	தூய வெள்ளிக்கிழமை விடுமுறை.
21—4—1984 (சனி)	..	பேரவைக் கூட்டம் இல்லை.
22—4—1984 (ஞாயிறு)	..	விடுமுறை.
23—4—1984 (திங்கள்)	..	எண். 33—வீட்டுவசதி. எண். 37—பொதுப் பணிகள் கட்டிடங்கள். எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரைப்பும், கருவிகளும், தளவாடமும். எண். 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.
24—4—1984 (செவ்வாய்)	..	எண். 36—பாசனம். எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.
25—4—1984 (புதன்)	..	எண். 48—கிராமத் தொழில்கள். எண். 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைத் துணைத் தலைவர்)

26—4—1984 (வியாழன்) ..	எண். 7—மாநிலச் சட்ட மன்மன்றம். எண். 8—தேர்தல்கள். எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். எண். 43—பல்வகை. எண். 57—பல்வகை மூலதனச் செலவு. எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல்
27—4—1984 (வெள்ளி)	நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.
28—4—1984 (சனிக்கிழமை)	மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
29—4—1984 (ஞாயிற்றுக் கிழமை)	விடுமுறை.
30—4—1984 (திங்கட்கிழமை)	மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம். சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து, நிறைவேற்றுவதற்கான நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS